பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம்
தங்க நகைகளால் மின்னிப்
பேசிட இன்றேவிரையுங்கள்!
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1768)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை 24-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 125

## ● இன்று நள்ளிரவுக்குப் பின்னர்

# யுத்த நிறுத்தத்தை நீடிப்பதில்லை

# புலிகளின் தலைமையகம் அறிவிப்பு

## நான்குமாத யுத்தநிறுத்தம் முடிவுற்றது

(வவுனியா விசேடநிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஒருதலைப் பட்சமாக கடந்த 4மாத காலமாக நீடிக்கப்பட்டு வந்த யுத்த நிறுத்தம் இன்று நள்ளிரவு 12மணியுடன் முடிவடைய இருப்பதை அடுத்து மேலும்ஒரு யுத்த நிறுத்த நீடிப்பை மேற்கொள்வதில்லை என்று விடுதலைப் புலிகளின் தலைமையகம் நேற்றுஅறிவித்துள்ளது.**

**சிறிலங்கா அரசின் விட்டுக்கொடுக்காத நிலைப்பாடு காரணமாகவே யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லை என்ற வேதனைக்குரிய முடிவிற்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.**

இவ்வாறு கடந்த நான்கு மாத காலமாக கடைப்பிடித்து வந்த ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைச் செயலகம்அறிவித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் யுத்தநிறுத்தத்தை நீடிக்காமைக்குரிய காரணங்கள்விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

நோர்வே அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கு நாம் எம்மால் முடிந்தளவு ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி வந்திருக்கிறோம். சமாதான முயற்சிக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண புறநிலையை உருவாக்கும்நோக்குடனேயே நாம் ஒருதலைப்

→ 8ஆம் பக்கம் பார்க்

## மன்னார் பலியல்வல்லுறவுச் சம்பவம்
## ஐவர் அடையாளம் காட்டப்பட்டனர்

(மன்னார்)

மன்னாரில் கடற்படையினரால்இருஇளம்குடும்பப்பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றுஇடம்பெற்ற அடையாளஅணிவகுப்பின் போது இருகடற்படையினரும்மூன்று பொலிசாரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் பாலியல்வன்முறைச்சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் எம் எச் எம் அஸ்மிர் முன்னிலையில நீதிமன்றில் அடையாள அணி வகுப்பு நடைபெற்றது

இந்தஅடையாள அணிவகுப்பில் மன்னார்நகரசபைத் தடுப்புப் பொலிஸ்பிரிவைச்

→2 ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேத் தூதுவரின் சமாதானமுயற்சிதொடரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு இன்று நள்ளிரவுமுதல்முடிவிற்கு கொண்டுவந்திருந்த போதும்,நோர்வேயின் சமாதான முயற்சியில் எந்தவிதமாற்றங்களும்இருக்க மாட்டாது என நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்துப்பேச்சுக்களைநடத்துவதற்காக நாளை வரவிருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் திட்டமிட்டபடி இவ்வார இறுதிக்குள் கொழும்பு வருவார் எனவும், கொழும்பு வரும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யுத்த பிரதேசத்திற்குள் செல்ல பத்திரிகையாளர்களுக்கு அனுமதி

### ஆரிய ரூபசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம்நடைபெறும் பிரதேசங்களுக்கும் பத்திரிகையாளர்கள் சென்று வருவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு சென்றுவர முடியும். ஆனால் அவர்களதுசுயபாதுகாப்பிற்கு அரசாங்கம் பொறுப்பாக மாட்டாது.

அரசாங்கம் பத்திரிகையாளர்களின் செயற்பாட்டிற்கு இடையூறாகச் செயல்படவில்லை அவர்கள் மீது இராணுவ ரீதியாக எவ்வித மன தடைகளையும் கெடுபிடிகளையும் நாம்ஏற்படுத்த மாட்டோம். ஆனால் பத்திரிகையாளர்கள தமது பணிகளின் போது காயமடைந்தாலோ

(8ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

அபிவிருத்தித் தொண்டர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சைக்குஅழைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியல்.

# சமாதானமுயற்சியைகுழப்பாதீர்கள்

# தமிழ்க் கட்சிகளிடம் ஆயர் குழு கோரிக்கை

(கொழும்பு)

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்குகுந்தகம்விளைவித்து குழப்பவேண்டாம் என்று ஆயர்கள் குழு தமிழ்க் கட்சித்தலைவர்களிடம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

இரத்தினபுரிமறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய மல்கம் இ. ரஞ்சித் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை அரசு சர்வதேச நாடுகளிடம் புலிகளைத்தடை செய்யுமாறு கோரி வருவதினால் அது சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்ப்பதில் தமிழ்க் கட்சிகளுக்குபொறுப்புணர்ச்சி உண்டென்றும் இதற்கு சகல தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் மென்று தமிழ்க்கட்சித் தலைவர்களை ஆயர் மல்கம் ரஞ்சித் கேட்டுக் கொண்டார்.

இச் சந்திப்பில் கூட்டணி காங்கிரஸ்,புளொட்,ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எவ்தலைவர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## செக்குடியரசு ஆயுதங்கள் போர் முனையில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தத்தைத் தீவிரப் படுத்துவதற்கான முயற்சியின் ஓர் அங்கமாக செக்குடியரசில் இருந்து பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க இராணுவத் தளபாடங்களையும், உபகரணங்களையும் இலங்கைஅரசு கொள்வனவுசெய்துள்ளது.

இந்தஆயுதங்கள் யாவும் அரசு புத்தாண்டைஒட்டி அறிவித்திருந்த தாக்குதல் தவிர்ப்புக் காலத்துக்குள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஓயாத அலையில் உயிரிழந்த புலிகளுக்கு ஆனையிறவில் அஞ்சலி

(வவுனியா)

ஆனையிறவுப்படைத்தளம் வெற்றிகரமாக ஓயாதஅலைகள் இராணுவநடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட முதலாம் ஆண்டு நிறைவுவிழா வன்னிப்பெருநிலப்பில்நேற்று உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணியமகா வித்தியலயத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப தமிழ்ச் செல்வன் தலைமையில் விழா நடைபெற்றது.

மேற்படிநிகழ்வில் ஆனையிறவு வெற்றிச்சமரினைப் பிரதிபலிக்கும் வகையில் தொகுக்கப்பட்ட ஓயாத அலைகள் மூன்று ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்ட

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நீர் வலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் என்பவருடைய 732933573V, 0903003250 இலக்க தேசிய, விசேட அடையாள அட்டைகள் 22-04-2001 அன்று திருநெல்வேலிக்கும் மூளாய்க்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரி காரியாலயத்தில் கொடுத்துதவவும்.

(2944)

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் மீனாட்சி அச்சகத்திற்கு முன்பாகநாயன்மார் வீதியிலுள்ள இலக்கம் 43 வீடும், கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, நடராசா பத்திநாதன் 103/1 கே யில் வீதி நல்லூர். (ஜீ ரி.சற். இற்கு முன்பாக) அல்லது 'வலம்புரி' இல: 15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். (கி- )

## வடக்கு-கிழக்கில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவஅதிகாரிகளுக்குத்தட்டுப்பாடு

## 40 பேருக்கு வெற்றிடம் நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மருத்துவ சுகாதார ஊழியர்களுக்கான பற்றாக்குறை கடந்த இருபதுவருடங்களாக தொடர்ந்து வருகின்றது.

இந்த வகையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுகாதார ஊழியர்களின் பதவி நிலைப் பிரகாரம் நிபுணத்துவம்பெற்றமருத்துவ அதிகாரிகளுக்கு 40 வெற்றிடங்கள் நிலவுகிறது.

86 மருத்துவ அதிகாரிகள் வெற்றிடங்களும், 60 மருந்துக் கலவையாளர் வெற்றிடங்களும், 109 பொதுச் சுகாதார அதிகாரிகள் வெற்றிடம் நிலவுவதுடன்,

பொதுச் சுகாதாரதாதியர் வெற்றிடம் 66ம் தாதிமுள் வெற்றிடம் 511ம், பொதுச் சுகாதார மருத்துவ மாதுகளுக்கான வெற்றிடம் 679ம், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்களுக்கு 22 வெற்றிடங்களும் நுண்ணியலாளர்கள் 14 பேருக்கும் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இந்த நிலைமைகளாலேயே வடக்கு- கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் பெரும் பின்னடைவுகளை எதிர் நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ-77]

## வண்ணை காமாட்சி அம்பாள் திருவிழாக் கவிதை

### தமிழான் தாய்

ஆச்சியாய் முகம்காட்டி அருள்மழை பொழிந்தாள்
நாச்சியாய் யுகம்காட்டி பொருள்மழை குவித்தாள்
சூழ்ச்சியால் மூண்டதீயினை சுட்டுவிரலால் கலைத்தாள்
புகழ்ச்சியால் நீண்டதமிழை புன்னகையால் காத்தாள்

பு. திலீப்காந்
அங் — 18

(வண்ணை காமாட்சி அம்பாள் ஆலைய கொடியேற்றத்தை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

## பயிற்சிப் பாசறையில் 19 பாடசாலைகள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச்சங்கத்தினரால் பாடசாலை மாணவர்க்கு இடையே நடத்தப்பட்ட பயிற்சிப் பாசறை நிகழ்வில் 108 புள்ளிகளைப் பெற்று இணுவில் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு சுற்றுக் கேடயத்தை பெற்றுக் கொண்டது.

107 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலையும் 97 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் பெற்றுள்ளன.

பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்குவெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

இப்பாசறை நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 19 பாடசாலைகளைச் சேர்ந்த 250 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பாசறை நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரியில் 4 தினங்கள் தொடர்ந்து நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## பொலிஸ்நிலையத்தை இடம் மாற்றுக

### புளொட் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை நடைபெறும். இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் ''தந்தை செல்வா சதுக்கத்திற்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தை இடம் மாற்றுவது மற்றும் யாழ் மணிக்கூட்டு வீதியை மக்கள பாவனைக்கு திறந்து விடல் ஆகிய இரு கோரிக்கைகளும் சபையில் பிரேரணையாக புளொட் அமைப்பின்மாநகர சபை உறுப்பினர் மு. தவநாதனால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொது நூலக புனரமைப்பு வேலைகள பூர்த்தியடையும் இவ்வேளையில மணிக்கூட்டு கோபுரம்திறந்தவெளியரங்கு பூங்கா ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. இந்நிலையில் அப்பகுதியில் பொலிஸ் நிலையம் அமைந்திருப்பது மக்கள்பல அசௌகரியங்களை அனுபவிக்க வழிசமைப்பதுடன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமையும். அத்துடன் நீண்டதூரம் சுற்றியே போக்குவரத்துச்செய்யவேண்டிவரும் இதனாலேயே மேற்படி கோரிக்கைகள்சபையில்சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இராசி பலன்

24-04-2001
[சித்திரை 11, செவ்வாய்]
பிரதமை மு இ 9 24வரை
பரணி பி இ 4 33 வரை
ராகுகாலம் 3.00-4 30
நல்லநேரம் 10,30 12.00
சித்தம்

**மேடம்**
பெரியோர் ஆசி, நண்பர்கள் உதவி, ஆழ்ந்தசிந்தை, முயற்சி கைகூடும்.

**இடபம்**
பணவிரயம், காரிய அலைச்சல் மனக்கிலேசம், பிதாசிந்தை

**மிதுனம்**
மனமகிழ்ச்சி, பொருள்வரவு தொழில்சிந்தை முயற்சிகை கூடும்.

**கடகம்**
பணியாயாளர்உதவி, தொழில்சிறப்பு, சுபநிகழ்ச்சி, காரியம் கைகூடும்.

**சிங்கம்**
நிலைமாற்றம், மனப்பயம், வயிற்றுக் கோளாறு, உடல் உழைப்பு.

**கன்னி**
துக்கமானசம்பவம், வியாதி பிரயாணபயம், முயற்சி தடங்கல், போசன சுகம்.

**துலாம்**
திடீர்பயணம், நல்ல உறவு கிடைத்தல், கௌரவமான நிலை, காரியநன்மை.

**விருச்சிகம்**
சந்தோசமானசம்பவம், காரிய அனுகூலம். பகைவர் விலகுவர், தனவரவு.

**தனுசு**
மனச்கிலேசம், உடல்சோர்வு முயற்சிதாமதம், தாழ்வுநிலை

**மகரம்**
கலகம், ரோகம், தன்னம்பிக்கைகுறைவு, காரியதாமதம்.

**கும்பம்**
முயற்சிகைகூடும், தனவரவு அன்னியர்சந்திப்பு, சகோதரர் உதவி.

**மீனம்**
தனவிரயம், வீண்விவாதம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

மன்னார்..

சேர்ந்த 15பொலிசாரும் விசேடவிசாரணைப்பொலிஸ் பிரிவைச்சேர்ந்த7பேரும் கடற்படையைச்சேர்ந்த 6பேரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

28பேர் அடையாளஅணி வகுப்பிற்குஉட்படுத்தப்பட்டபோதும் ஐவர்மட்டுமேபாதிக்கப்பட்ட இருபெண்களினாலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடற்படையைச் சேர்ந்த எம். சிசிரகுமார, பிரியதர்சன மன்னார் நாசகாரதடுப்புப் பொறுப்பதிகாரி சுரவீர, எம் இராசேந்திரன், என். விமலரத்தின ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

அடையாளம் காணப்பட்ட ஐவரையும்அடுத்தமாதம்10ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம)

## ஊடகவியலாளர்களை அங்கீகரிப்பதற்கு பாராளுமன்றில் சட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களை ஊடகத் தொழில்புரிவோராக அங்கீகரிபபதற்கு பாராளுமன்றில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக தகவல் தொடர்பு சாதன அமைச்சர் அநுரா பிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறையின் சுதந்திரத்தைப் பேணவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

தமிழ்- சிங்களப் பத்திரிகையாளர்களை பயிற்றுவிப்பதற்காகநிறுவப்படவுள்ள பயிற்சி நிலையம் ஆரப்பத்தில் அரசு சார்பானதாகச் செயற்பட்டாலும் காலப்போக்கில் சுதந்திரமானதாகச் செயற்படும்.

என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## 28இளைஞர்கள் கைது

(கொழும்பு)

பதுளை நகரில் நேற்று மாலை திடீரென நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 28 இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மலையக தோட்டப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறக் கடைகளில் தொழில் புரிய வந்தவாகள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## 900பேர் கைது

(ரோம்)

சட்ட விரோத குடியேற்றக்காரரர் தொளாயிரம் பேரை இத்தாலிக்கு ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்றை இத்தாலியக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

[4]

## பாலம்

(வலம்புரி பல்சுவை இலக்கியமையம்)

### இலக்கிய கர்த்தாக்களே ஒருநிமிடம் . . .

உங்கள் ஆக்கங்கள் வந்து
குவிந்த வண்ணமேஉள்ளன
அத்தனையும்
பாலம்
வலம்புரி பல்சுவை
மையத்தில்
வலம் வரவுள்ளன...
இந்த வேளையில்
உங்களுடன் சில
வார்த்தைகள்,
நல்ல தொரு களமின்றி
தேங்கிவிட்ட
உங்கள் எண்ணங்கள்
உணர்வலைகள்
தவிப்புகள் மிகப் பெரிது;
நாளடைவில் உங்கள்
பெரு இலக்கிய
முயற்சிகளுக்கும்
வலம்புரி களம் சமைக்கும்
ஆனால் இப்பொழுது.
உங்கள் எண்ணங்களை
வடிகட்டி வரையறுத்து
சுருக்கமாக இறுக்கமாக
எழுதி அனுப்புங்கள்...
கதை கட்டுரைகள்
போன்றவற்றை
150 சொற்களுக்கு
மேற்படாத வகையிலும்,
கவிதைகள்
30 சொற்களுக்குள்
உள்ளடங்கியதாகவும்
மற்றும்
நகைச்சுவை துணுக்குகள்
படித்து சுவைத்தவை
விமர்சனங்கள்
கருத்தாக்கங்கள்
பல்சுவை தொகுப்புகள்
அனைத்தும்
எதிர்பார்க்கப்படுன்றன.

[ஆ-ர்]

## பல்கலைக் கழகத்தில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்ள பல விளம்பரப்பலகைகளில் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

''இவர் சமாதான விரும்பி அல்ல'' என சந்திரிகாவின் படத்துக்கு கீழேயும் ''சமாதானம் என்றால் சமாதானம்'' ''யுத்தம் என்றால் யுத்தம்'' என பிரபாகரனின் படத்துக்கு கீழேயும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

(இ-06)

## சமுர்த்தி செயற்பாடுகளில் அரசியலுக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

சமுர்த்தி இயக்க செயற்பாடுகளில் அரசியல் தலையீடு இடம் பெறுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொதுநல கேட்போர் கூடத்தில் சமுர்த்தி முகவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(ந-4)



## ஹாட்லியின் அஞ்சலிகள்

ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபரும்,
நிர்மாணச் சிற்பியும், கல்வியுலகின் புகழ்பூத்த
சான்றோனும் நிர்வாக மாமணியுமான,

### அமரர்-க பூரணம்பிள்ளை

22-04-2001 அன்று இலண்டனில் காலமானார்.

அன்னாரின் இழப்பினால் கவலையில் ஆழ்ந்த
அனைவருடனும் ஹாட்லிக் கல்லூரிச் சமூகம்
இணைந்து கொள்கிறது.

ஹாட்லிக் கல்லூரிச் சமூகம்
(கி - 1874)

### வடக்கு - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால்

# அபிவிருத்தி தொண்டர்களை தெரிவு செய்ய

# நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வட பகுதி - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அபிவிருத்தித் தொண்டர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை அந்தந்தப்பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரமாக தெல்லிப்பழை (வலிவடக்கு) பிரதேச செயலர் பிரிவில் நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பிறப்புச் சான்றிதழ், நற்சான்றிதழ் போன்றவற்றுடன் தோற்றுமாறு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) கேட்டுள்ளார். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு:

## பிரதேச செயலர் பிரிவு தெல்லிப்பழை

முருகன் நிலோஜினி- செல்வராசா விஜயமலா- நாகராசா சசிகலா- கந்தசாமி றஜனி- செல்லத்துரை சறோஜினிதேவி- மார்க்கண்டு மாலினி- வேலுப்பிள்ளை அமிர்தா- மகேந்திரம் சுகந்தன்- சிங்கராசா ஜெனிஸ்ரன் சாவியோ- தெய்வேந்திரம் மாலினி-துஷ்யந்தி கணேசன்- செபஸ்தியாம்பிள்ளை யோணமோகன்- தம்பிராசா அன்பரசன்-தியாகராசா றசிகுமார்,

கந்தசாமி விஜயரூபன்- மாதன் கந்தசாமி- நடராசா பாலகிருஷ்ணன்- மனுவேல்பிள்ளை அமலதாஸ்- கந்தசாமி பேரின்பநாயகம்- செல்லத்துரை மதிவதனி- திருயோகரத்தினம் ஜெயசித்தாதேவி- வினாசி சந்திரமோகன்- பஞ்சன் சதாந்தன்- இலிங்கம் அனந்தவதனி- இந்திரன் சுபத்திரா- சிங்கராசா தெய்வேந்திரன்- அற்புதநாதன் குகேந்திரநாதன்,

பொன்னன் அமலநாத்- பொன்னுத்துரை ரேவதி- அருண்குமார் ரஜினி- செல்வம் தீபன்- கணேசன் சதீஸ்குமார்-முருகேசன் மேரிலதா- செல்வம் இராசகுமார்- சின்னத்தம்பி கிருஸ்ணகுமாரி- சிவரஞ்சன் மகிழ்மலர்-சுப்பிரமணியம் தர்சினி- சாந்தகுமார் சிவகுமார்- இராசையா நற்குணவதி- காமினி தெய்வேந்திரன்,

ஜெயசித்திரா தர்மலிங்கம்- கந்தசாமி சசிதேவி- சண்முகலிங்கம் புவனேந்திராசா- செல்வராசா ஜினோவபிலெஸ்-வேதநாயகம அன்ரனி- தனிநாயகம் இருதயநாதர்- அல்பேட் தேவராஜன்- பத்திநாதர் நிக்கொலோஸ்ரீபன்- கதிரவேலு பாலகாந்தா- செல்லத்துரை மாலினி- கதிர்காமலிங்கம் அருட்செல்வம்- நாகமுத்து வாகினி- கதிரவேலு சுபேந்திரகுமார்- வெற்றிவேல் கபிலன்- பஞ்சலிங்கம் புஷ்பராசா.

தங்கவேலு இளங்குமரன்- கதிரவேலு மனோகரன்- பிரேம்குமார் தவராசா- மார்க்கண்டு கேதீஸ்வரன்- மகேந்திரன் அற்புதவதனி- கந்தையா தயாளினி- இராஜேஸ்வரி கந்தையா- இராசு உதயச்சந்திரன்-செல்வராஜா ஜெயராசா- சின்னத்துரை கருணாகரன்- இராஜரெட்ணம் ஜெயபாலசிங்கம்- சின்னத்தம்பி ராஜா- சிவராஜா சிவசீலன்- கதிர்வேலு மகேந்திரன்- செல்லையா செல்வராசா- மாணிக்கம் குமாரகுலசிங்கம்- சாமிநாயகம் செல்வநாயகம்- திருநாவுக்கரசு றிதீனா- நாகராசா ஸ்ரீபரன்- பரராசசிங்கம் ஜெயந்தகுமார்- கந்தசாமி ரகுரதன்- குணசேகரம் துவாரகன்- மாசிலாமணி கேசவன் தியாகராசா பவானி-செல்வராசா மாலினி குகானந்தன் நகுலராணி- பத்மநாதன் கவிதா- சின்னத்துரை சாந்தினி- ஐயாத்துரை அனோஜா- வேலுப்பிள்ளை பத்மாதேவி- நாகேந்திரம் ஜெயவதனி- சௌந்தரராஜன் றஜீதா- புவனகிரிதரன் யுஜிவன்- இராசகோபால் பிரதீஸ்குமார்- கந்தசாமி ரகுரதன்- மரியராசா ரட்ணம் அருள்சீலி- இராசதுரை இராகுலன்- குணசிங்கம் சுகுணா- செல்லத்துரை அகிலராணி- தியாகராசா ஜீவராணி- ஜெயச்சந்திரன் மேரிலுமினா விஜயமுனாட்டீஸ்வரி சீனியன்- கற்கண்டு ரமேஸ்- கந்தசாமி அரவிந்தன்.

மகேஸ்வரலிங்கம் மதனராஜா- மகாலிங்கம் கலைச்செல்வி- அகிலேஸ்வரி ஞானசேகரம்- முருகையா சிவகௌரி- கந்தசாமி சரோஜா-

நாகமணி இந்திரசீலன்- நாகேந்திரம் சிவகௌரி- சித்தாத்தன் குணாலினி- அருளானந்தம் அமிர்தா- சிவதர்சன் சிவகுரு- முத்துராசா விஜிதா-

பிரான்சிஸ் எபிரொலின்- பரமானந்தம் உமா- சிவனடியான் அனுதாஸ்- இராசையா ஞானேஸ்வரி- சீதாதேவி மகாலிங்கம்- ஜீவரெட்டினம் றொஜினா- யோகராசா காஞ்சனா- ஜெயபாலசிங்கம் சந்திரகுமார்- பாலசுப்பிரமணியம் பரவேந்திரா- தங்கமயில் ரஜனி-

ஐயாத்துரை அனோஜா- யூவ்யற் அன்ரஸ் ரஸ்ராஜ்- குகானந்தம் சுசிலாதேவி- யோகராசா சசிலா- கந்தையா பரமேஸ்வரன்- ஐயாத்துரை மனோராஜா- முத்துராசா விஜிதா-

துரைசிங்கம் மயூரன், அருமைரத்தினம் சந்திரகாந்- மருதவீரன் கொண்ஷசலா, நாகேந்திரம் புஸ்பேந்திரன்- அருளன் கோபிதாஸ்,

பஞ்சலிங்கம் வினோதினி- கதிரவேலு விஜயகுமார்- நாகரத்தினம் மதிவண்ணன்- செல்லத்துரை தெய்வீகச் செல்வம்-துரைச்சாமி மனோகராம்பாள்,

செல்வவடிவேல் சிவறூபன்-செல்லையா குமாரசூரியர் -மார்க்கண்டு பத்மகௌரி -பழனியாண்டி கஜேந்திரன்- அருள்சிறிதாஸ்- மார்க்கண்டு உதயறஞ்சினி- ஐயாத்துரை அன்பழகன்- மகேந்திரன் சுகுமார்,

தெய்வேந்திரம் மாலினி- நவரத்தினராசா நவரஜனி- தங்கவேலு இளங்குமரன்- வெற்றிவேலன் கபிலன்-சுப்பிரமணியம் விமலரஞ்சன்- முருகமூர்த்தி ரதிஸ்காந்- சின்னராசா ஜெகன்- சண்முகராசா சசிகுமார்- தட்சணாமூர்த்தி சுபாஜினி-செல்வரமேஸ் மேரிகொலஸ்ரிக்கா கந்தசாமி ஜெயமூர்த்தி,

மார்க்கண்டு ஜெயலிங்கம் தர்மராசா வெண்ணிலா- பொன்னுத்துரை தவச்செல்வி,

★ ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் நாளை வெளிவரும். (ந)

## 20 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

[மந்திகை]

வடமராட்சிதெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 20 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்கபபடவுள்ளது.

யுனிசெவ் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள இம் மலசல கூடங்களுக்காக ஒவ்வொரு குடுமபத்திற்கும் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடமபெற்று வருவதாகப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். [உ-23]

## முச்சக்கர வண்டி பாவனையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

ஜெயப்பூர் நிறுவனத்தில் அவயவங்கள் பொருத்துவோர், முச்சக்கர வண்டி பாவனையாளர்கள், சுய தொழில் முயற்சியில் ஈடுபட விருப்புவோர் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று 9மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் ஜெயப்பூர் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது:

கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, நல்லூர், யாழ்ப்பாணம், ஆகியபிரதேச செயலகங்களுக்கு உட்பட்டவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும்.

பி.ப 2.00 மணிக்கு இணுவிலில் உள்ள ஜெயப்பூர் நிறுவனத்தில் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்டவர்களுக்கும் கலந்துரையாடல் நடைபெறும். (உ-2)

## காணாமற் போனோர் தொடர்பான விசாரணை அழைக்கப்பட்டோர்விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்துகாணாமற்போனோர் சம்பந்தமாக விசாரணையினை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பின்வருவோர் சம்பந்தமான விசாரணைகள் நடத்த உறவினர்களை அழைத்துள்ளனர்.

### யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம்

துரைசிங்கம் செந்தில்நாதன் 6 ஆம் வில்வம் தெரு, லேன் அரியாலை,

தர்மராசா ரமேஸ்கரன் 36, கனகரட்ணம் வீதி, அரியாலை.

சின்னத்துரை செல்வநாதன் சரசாலை வடக்கு, சரசாலை.

தனபாலசிங்கம் கிருஸ்ணசிங்கம் இராசகிரி, கோபபாய்,

கந்தசாமி ராஜ்குமார் பெரியசரி சாவகச்சேரி.

கந்தையா கந்தசாமி 83, 3ஆம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம.

காசிப்பிள்ளை கேதாரநாதன் 488/1 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பரராஜசிங்கம் மகேந்திரம் 21/5 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

கோபாலப்பிள்ளை ஜெயசீலன் 2/1, மூத்த விநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

சந்திரசேகரம் லோகேஸ்வரன் கைதடி கிழக்கு, கைதடி.

சிந்தியன் பொன்னம்பலம் கைதடி வடக்கு, கைதடி.

### பருத்தித்துறை பொலிஸ் நிலையம்

குணரட்ணம சின்னராசா 426. பத்தானை மேற்கு புலோலி.

நவரட்ணம் றெக்கால் கோணேஸ்வரன் பிள்ளையார் கோவிலடி தும்பளை,

ஆனந்தன் ராஜ்குலசிங்கம் தும்பளை பருத்தித்துறை.

அப்புலிங்கம ஸ்ரீதவலிங்கம் 104/ஏ ஆதி கோவிலடி வல்வெட்டித்துறை.

ஞானபபிரகாசம் சிறிரஞ்சன் 10, லூட்ஸ் லேன், தும்பளை பருததித்துறை.

### சுன்னாகம் பொலிஸ் நிலையம்

நாகலிங்கம ஆறுமுகம் சரவணநாதன் காந்தியூட்ஸ் புலோலி வடக்கு, புலோலி.

கந்தையா திவாகரன் தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

இராசலிங்கம இராஜசீலன் சாவற்காடு சுதுமலை.

அருந்தவராசா செல்வரத்தினம இராலிகிழக்கு, இராலி.

குணரட்ணம செல்வறூபன் வாணிகம் திடல் இளவாலை.

(உ-10)

## பருத்தித்துறை கரையோரப் பகுதிகளில் தண்ணீர் தாங்கி அமைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை கரையோரப் பகுதியில் தண்ணீர் தாங்கிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டு வருகிறது:

இப் பகுதியில் மக்கள் நன்னீர் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களையடுத்து தற்போது நன்னீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

சுப்பர் மடம், முனை, வெளிச்ச வீட்டுப்பகுதிகளில் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. [உ-23]

## மீன் விற்பனைப் பகுதியில் இட நெருக்கடி

(இணுவில்)

மானிப்பாய்ப பொதுச் சந்தையின் மீன விற்பனைப் பகுதியில் பெரும் இடநெருக்கடி நிலவுகிறது.

இருக்கை வசதி இல்லாத காரணத்தினால் மீன் வியாபாரிகள பெரிதும் இடைஞ்சல்களுக்குள்ளாவதுடன்.

இடநெருக்கடி காரணமாக மீன வாங்கச் செலவோர் அங்கு செல்லப் பின்னடிதது வருவதாகவும கூறபபடுகிறது. [உ-49]

## மேதின ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]

எதிர் வரும் மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் முன்னேற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பணிமனைக்கு அருகில் உள்ள காணி செப்பனிடப்பட்டு அக் காணிப் பகுதியிலே மேதினக் கொண்டாட்டம் நடைபெறப்போவதாக அவ் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் [உ-10]

## பரீட்சைகள்

(இணுவில்)

சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சைகள் யாவும் அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவுள்ளன

இதற்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-49)

## இளைஞனின் சடலம் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து கோப்பாய்ப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் இனந் தெரியாத ஆணின்சடலம் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுளளது.

நேற்று முன்தினம் இரவு ஒப்படைக்கப்பட்ட சடலம அடையாளம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் பொருட்டும வைத்தியசாலைப் பிரேத அறையில வைக்கப்பட்டுளது (உ-4)

## அமைப்பு வேலை பூர்த்தி

(இணுவில)

உடுவில கமநல சேவைகள் நிலையத்தால் விவசாயிகள மற்றும பொது மக்கள நலன் கருதி அமைக்கப்பட்ட புதிய விவசாய உள்ளீடுகள மற்றும விவசாய உபகரணங்கள் விற்பனை நிலையமும உரககளஞ்சியத் தொகுதியும அமைபபு வேலைகள பூர்த்தியாகியுள்ளன. (உ-49)

## கேணி புனரமைப்பு

(மலலாகம)

உடுவில் மல்வம ஞானவைரவர் கோயிலின் கேணி புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

(உ-122)

## அலங்கார உற்சவம்

(யாழப்பாணம)

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம இன்று ஆரமபமாகி தொடர்ந்து பததுநாட்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும 3 ஆம திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகத்துடன் நிறைவுறுகின்றது. [வச]

# பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டால் யுத்த நிறுத்த அறிவிப்பு

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிவுறுத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான பேச்சுக்களின் முன்னேற்றத்தில்தான் யுத்தநிறுத்தம் தங்கியுள்ளதுஎனப் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அநுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்:

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை நம்பிக்கைதரும் பட்சத்தில் மாத்திரமே அரசு யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளும்.

யுத்தத்தினை முடிவிற்கு கொண்டுவர அரசு, இரு பரிமாணக் கொள்கையினை பின்பற்றி வருகின்றது.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தல்; தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைப் பெற்றுக் கொடுப்பது ஆகியனவே இவ்விரு பரிமாணக் கொள்கைகள் ஆகும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# இளம்பெண் உட்பட ஐவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஐவரைக் காணவில்லையென உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த கணபதி சுபீந்திரம் (வயது 21)

குடமியன் வரணியைச் சேர்ந்த சின்னத்துரை கிருபாகரன் (வயது 21)

கல்வியங்காட்டைச்சேர்ந்த நவரத்தினம் வாகீஸ் (வயது 20) ஆகியோரை இம்மாதம் 14 ஆம் திகதி முதல் காணவில்லை எனவும்.

இம் மாதம் 19 ஆம் திகதி முதல் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முருகையா தயாளினி [வயது 21]

கடந்த வருடம் ஜுன் 23 ஆம் திகதியில் இருந்து கரவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுமந்திரன் [வயது 28] ஆகியோரைக் காணவில்லை எனவும்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

# வசதிகுறைந்த நிலையில் மருதனார்மடம் சந்தை

(இணுவில்)

மருதனார்மடம் சந்தையில் விற்றல் வாங்குதல் பணிகள் அதிகரித்து பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும், சந்தை, வசதிகள் குறைந்த நிலையிலேயே தொடர்ந்தும் இயங்கி வருவதாகப் பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஏற்ற இடங்கள் இல்லாமலும் கொட்டகை வசதிகள் போதாமலும் இருப்பதால் அங்கு செல்வோர் மழை மற்றும் வெய்யில் மத்தியில்பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

தவிர சைக்கிள்கள் பாதுகாப்பாக நிறுத்துவதற்குரிய இடம் போதாமையினால், அயலிலுள்ள கட்டாந்தரையில் அவற்றை பாதுகாப்பற்ற நிலையில் விட்டுச்செல்லும் நிலையும் காணப்படுகிறது.

இதேவேளை, இச்சந்தை அமைந்துள்ள அரைமைல் சுற்றாடலில் இணுவில் சந்தை என்ற பெயரில் சந்தைஒன்று அமைக்கப்பட்ட போதிலும் இங்கு பூரணமான சந்தைப் பணிகள் இடம்பெறாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-49)

# இராமநாதன் இளைஞர் கழக அணி சம்பியனானது

(ஊர்காவற்றுறை)

பருத்தித்துறை இளைஞர் கழகங்களின் பிரதேசசம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டிகளில் குழுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

உதைபந்தாட்டத்தில் சேர் பொன் இராமநாதன் இளைஞர் கழக அணி முதலாவது இடத்தினையும், கற்கோவளம் இளைஞர் கழக அணி இரண்டாவது இடத்தினையும, திக்கம் இளைஞர் கழக அணிமூன்றாவது இடத்தினையும பெற்றன

மென்பந்து துடுப்பாட்டத்தில் சேர் பொன் இராமநாதன் இளைஞர்கழக அணி முதலாவது இடத்தினையும், திக்கம் இளைஞர் கழக அணி இரண்டாவது இடத்தினையும், பாரதி இளைஞர் கழக அணி மூன்றாவது இடத்தினையும பெற்றன.

கரப்பந்தாட்டத்தில் சேர் பொன் இராமநாதன் இளைஞர்கழக அணி முதலாவது இடத்தினையும் திக்கம்இளைஞர்கழக அணி இரண்டாவது இடத்தினையும, பாரதி இளைஞர் கழக அணிமூன்றாவது இடத்தினையும பெற்றன.

இக் குழுப்போட்டிகளில் மூன்றில் சேர் பொன் இராமநாதன் இளைஞர் கழக அணி முதலாமிடத்தினைப் பெற்று சம்பியனாகத்தெரிவானது. (உ-75)

# மாதகல் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இளைஞர்கழகம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்டமாதகல் தெற்கு ஜே/151 கிராம அலுவலர் பிரிவில் அண்மையில இளைஞர் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாதகல்தெற்குகிராமஅலுவலர் அலுவலகத்தில் இளைஞர் சேவை அலுவலர் எஸ். கோகிலராஜன் தலைமையில் இளைஞர் கழகத்தின் தலைமையில் இளைஞர் கழகம் அங்குரார்ப்பணக் கூட்டம் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் மாதகல் தெற்குஇளைஞர் கழகத்தின் தலைவராக செல்வி. என். சுமித்திரா, செயலாளராக செல்வி. ஆர். விஜயமாலா, பொருளாராக செல்வி. உ. மோகனா ஆகியோர்உட்பட 11 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். [உ-75]

# சமுர்த்தி அலுவலகங்கள் இயங்குகின்றன

(வட்டுக்கோட்டை)

வலிகாமம மேற்கு பிரதேச செயலர் பிரிவில திறக்கப்பட்டஇரண்டு சமுர்த்தி வலய அலுவலகங்களில் கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வலுவலகங்களில் ஒன்று மூளாய்வீதியிலும் மற்றையது சங்கரத்தை சந்தியிலும் இயங்கி வருகின்றது.

இவ்வலுவலகங்களுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள பிரதி வியாழக்கிழமை தோறும் சென்று சமுர்த்தி முகாமையாளர் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றி வருகின்றனர். [உ-24]

# போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் ''கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம்-2001'' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், கடந்த 21 ஆம் திகதி நடைபெற இருந்துமழை காரணமாக நிறுத்தப்பட்ட மானிப்பாய் பரிஷ் எதிர் சென்றலைட் விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான போட்டி வரும் வியாழக்கிழமை பி.ப.1.00 மணிக்கு இடம்பெறும். (உ)

# பெயர் பலகைகள் இடமாற்றம்

(இணுவில்)

புதுவருடப பிறப்பைஒட்டி அமுலபபடுத்தப்பட்ட ஊரடங்கு தளர்வைச் சாதகமாகப பயன்படுததி சிலர் குபபிளான பகுதியில விஷமத்தனமான செயலகளில ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதி தனியார் கல்வி நிறுவனததின் பெயர்ப் பலகையை அருகிலிருந்த பலசரக்குக் கடையொன்றிலும் பலசரக்குக் கடையின் பெயர்ப் பலகையை தனியார் கல்வி நிறுவனத்திலும் தொங்க விட்டதாக தெரியவருகிறது. (உ-49)

# உதவுபணி

(யாழ்ப்பாணம்)

வட-பிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் இளைஞர் சபையினர் கைதடியில் இருந்து இடம்பெயர்ந்து மூளாயில் இயங்கும் வயோதிபர் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உதவு பணிகளை மேற்கொண்டனர்.

இச்சேவையில் 40 ற்கும் மேற்பட்ட சாயி இளைஞர்கள் கலந்து கொண்டனர். (உ-104)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது:

### சங்கானை

| | |
|---|---|
| 156036 ஏ | 170051 ஏ |
| 172876 ஏ | 172877 ஏ |
| 181531 ஏ | 181643 ஏ |
| 183196 ஏ | 183196 பி |
| 183196 சி | 183196 டி |
| 184979 ஏ | 185073 ஏ |
| 185073 பி | 185073 சி |
| 185095 ஏ | 186583 ஏ |
| 186583 பி | 186750 ஏ |
| 186750 பி | 186759 சி |
| 186753 ஏ | 186787 ஏ |
| 186794 ஏ | 186794 பி |
| 186800 ஏ | 186850 ஏ |
| 186850 பி | 186956 ஏ |
| 186956 பி | 186956 சி |
| 186956 டி | 186956 ஈ |
| 186957 ஏ | 186997 ஏ |
| 186997 பி | 186997 சி |
| 186997 சி | 186998 ஏ |
| 186998 பி | 187052 ஏ |
| 187061 ஏ | 187061 பி |
| 187061 சி | 187227 ஏ |
| 188616 ஏ | 188616 பி |
| 188642 ஏ | 188666 ஏ |
| 188666 பி | 188681 ஏ |
| 188695 ஏ | 188729 ஏ |
| 189354 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 183486 ஏ | 185142 ஏ |
| 186742 ஏ | 186742 பி |
| 186742 சி | 186776 ஏ |
| 186825 ஏ | 186862 ஏ |
| 186884 ஏ | 186970 ஏ |
| 183970 பி | 186970 சி |
| 186970 டி | 186974 ஏ |
| 186974 பி | 187096 ஏ |
| 187105 ஏ | 187144 ஏ |
| 188633 ஏ | 188633 பி |
| 188717 ஏ | 188717 பி |
| 188711 பி | 188745 ஏ |
| 188745 பி | 188745 சி |
| 188772 ஏ | 188772 பி |
| 188795 ஏ | 189347 ஏ |
| 189350 ஏ | 189410 ஏ |
| 189410 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179169 ஏ | 179170 ஏ |
| 149170 பி | 181103 பி |
| 181492 ஏ | 181492 பி |
| 181462 சி | 183103 ஏ |
| 183103 சி | 183188 ஏ |
| 183188 பி | 184841 பி |
| 184960 ஏ | 185147 ஏ |
| 185148 ஏ | |
| 185202 ஏ | 186610 ஏ |
| 186752 ஏ | 186752 பி |
| 186752 சி | 186754 ஏ |
| 186754 பி | 186744 சி |
| 186754 டி | 186767 ஏ |
| 186807 ஏ | 186808 ஏ |
| 186812 ஏ | 186813 ஏ |
| 186841 ஏ | 186934 ஏ |
| 186963 ஏ | 186963 பி |
| 186963 சி | 186[illegible]95 ஏ |
| 187009 ஏ | 187009 பி |
| 187009 சி | 185057 ஏ |
| 187181 ஏ | 187181 பி |
| 187205 ஏ | 187205 பி |
| 187214 ஏ | 187214 பி |
| 187214 சி | 188611 ஏ |
| 188623 ஏ | 188641 ஏ |
| 188641 பி | 188623 சி |
| 188643 ஏ | 188644 ஏ |
| 188671 ஏ | 188671 பி |
| 188678 ஏ | 188978 பி |
| 188678 சி | 188690 ஏ |
| 188710 ஏ | 188756 ஏ |
| 188756 பி | 188788 ஏ |
| 189317 ஏ | 189317 பி |
| 189465 ஏ | 189465 பி |
| 189465 சி | 189465 டி |
| 188641 சி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 181665 ஏ | 185278 ஏ |
| 186763 ஏ | 186763 பி |
| 186882 ஏ | 186940 ஏ |
| 186940 பி | 189940 சி |
| 186940 டி | 186943 ஏ |
| 186943 பி | 186948 ஏ |
| 187120 ஏ | 187120 பி |
| 187120 சி | 187177 ஏ |
| 188657 ஏ | 188657 பி |
| 188705 ஏ | 188706 ஏ |
| 89346 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 179194 ஏ | 180316 ஏ |
| 180316 பி | 180330 ஏ |
| 185087 ஏ | 185239 ஏ |
| 185239 பி | 186810 ஏ |
| 186810 பி | 185810 சி |
| 186810 டி | 186810 ஈ |
| 186890 எப் | 186823 ஏ |
| 186867 ஏ | 186926 ஏ |
| 187063 ஏ | 187063 பி |
| 187063 சி | 187094 ஏ |
| 187094 பி | 187094 சி |
| 187130 ஏ | 187196 ஏ |
| 188607 ஏ | 188607 பி |
| 188607 சி | 188668 ஏ |
| 188668 பி | 188689 ஏ |
| 188689 பி | 188689 சி |
| 188694 ஏ | 188731 ஏ |
| 188746 ஏ | 188646 பி |
| 188765 ஏ | 189378 ஏ |
| 189378 பி | 189378 சி |
| 189405 ஏ | 189438 ஏ |

ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகஅனுப்பப்பட்டுள்ளது:

### சங்கானை

| | |
|---|---|
| 183041 ஏ | 183041 பி |
| 184848 ஏ | 185053 ஏ |
| 185053 பி | 185053 சி |
| 185264 ஏ | 185264 பி |
| 187127 ஏ | 187127 பி |
| 187127 சி | 187127 டி |
| 188682 ஏ | 188682 பி |
| 189313 ஏ | 189313 பி |
| 189313 சி | 189325 ஏ |
| 189355 ஏ | 189483 ஏ |
| 189483 பி | 190735 ஏ |
| 190737 ஏ | |
| 190737 பி | 190737 சி |
| 190737 டி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 186789 ஏ | 186789 பி |
| 186789 சி | 188227 ஏ |
| 189503 ஏ | 189503 பி |
| 189507 ஏ | 189507 பி |
| 189568 ஏ | 189571 ஏ |
| 190474 ஏ | 190483 ஏ |
| 190529 ஏ | 190529 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178966 ஏ | 178966 பி |
| 186905 ஏ | 186934 ஏ |
| 187156 ஏ | 187156 பி |
| 188530 ஏ | 188530 பி |
| 188614 ஏ | 188785 ஏ |
| 189452 ஏ | 189452 பி |
| 189452 சி | 189563 ஏ |
| 189563 பி | 189645 ஏ |
| 190505 ஏ | 190513 ஏ |
| 190552 ஏ | 190580 ஏ |
| 190580 பி | 190619 ஏ |
| 190639 ஏ | 190678 ஏ |
| 190702 ஏ | 190702 பி |
| 190726 ஏ | 190726 பி |
| 190734 ஏ | 191840 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 185320 ஏ | 189346 ஏ |
| 189348 ஏ | 189348 பி |
| 189352 ஏ | 189522 ஏ |
| 189522 பி | 189522 சி |
| 189522 டி | 190509 ஏ |
| 190509 பி | 190509 சி |
| 190509 டி | 190509 ஈ |
| 190509எப் | 190509 ஜி |
| 190509எச் | 190533 ஏ |
| 190638 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 164045 ஏ | 164046 ஏ |
| 180342 ஏ | 180348 ஏ |
| 180348 பி | 180350 ஏ |
| 180350 பி | 180354 ஏ |
| 185203 ஏ | 186880 ஏ |
| 186881 ஏ | 186891 ஏ |
| 186893 ஏ | 186893 பி |
| 188622 ஏ | 188622 பி |
| 188622 சி | 188622 டி |
| 188755 ஏ | 189390 ஏ |
| 189390 பி | 189420 ஏ |
| 189445 ஏ | 189445 பி |
| 189445 சி | 189446 ஏ |
| 189468 ஏ | 190453 ஏ |
| 190466 ஏ | 190466 பி |
| 190466 சி | 190466 டி |
| 190466 ஈ | 190510 ஏ |
| 190511 ஏ | 199611 ஏ |
| 190659 ஏ | 190734 பி |
| 190734 சி | 190734 டி |
| 190740 ஏ | |

## இன்று ஒரு தகவல்

# ஆணவம் அடங்கிற்று

பேரறிஞராகிய டயோ ஜெனிஸ் என்பவர் மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியராக இருந்தார். தான் மேம்பட்டவன், மற்றவர்களை விட உயர்ந்தவன் என்ற எண்ணம் அலெக்சாண்டரின் உள்ளத்தில் ஊறி இருந்தது. ஆசிரியரைத்தேடி அலெக்சாண்டர் அவர் இல்லத்திற்கு ஒரு நாள் சென்றான். அப்பொழுது டயோ ஜெனிஸ் பல மனித மண்டை ஓடுகளை வைத்து ஒவ்வொன்றையும் மிக உன்னிப்பாக உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்.

நீண்டநேரமாகியும்அலெக்சாண்டர் வந்ததை அவர் கவனிக்காமல் தம் செயலிலேயே ஈடுபட்டிருந்தார். பொறுமையிழந்த அலெக்சாண்டர் சிறு கனைப்புக் கனைத்தான்: ஆசிரியர் திரும்பிப் பார்த்தார், ''ஐயா! இந்த மண்டை ஓடுகளை வைத்து அப்படி என்ன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்? என்று பணிவுடன் கேட்டான் அலெக்சாண்டர்.

''வேறொன்றுமில்லை: இதில் ஒன்று உன் தந்தையாரின் மண்டை ஓடு. மற்றவை அடிமைகளின் மண்டை ஓடுகள். இவற்றுள் எது உன் தந்தையின் மண்டை ஓடு என்று கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டே[illegible]. ஆனால் இம் மண்டை ஓடுகளிடையே என்னால் வேற்றுமையே காண முடியவில்லை. எல்லாம் ஒன்று போலவே இருக்கின்றன. உன்னால் கண்டு பிடிக்க முடிகிறதா? பார்'' என்று கேட்டார் டயோ ஜெனிஸ். இதைக் கேட்ட அலெக்சாண்டரின் ஆணவம் அழிந்தது.

பேராசிரியர் எ. சோதி

# திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில்

# யாழில் மாபெரும் தமிழ் விழா

## தென்னிலங்கைக் கலைஞர்களும்பங்கேற்பு

(ஈச்சமோட்டை)

இலங்கையின் திருமறைக் கலாமன்றத்தினர் இணைந்தும் தமிழ்விழா ஒன்றை யாழ்ப்பாணத்தில் வெகு சிறப்பாக நடத்தவுள்ளனர்.

மே 5 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுளள இத் தமிழ் விழாவை தென்னிலங்கை, கிழக்கிலங்கைத் திருமறைக் கலாமன்ற கலைஞர்கள், யாழ். திருமறைக் கலாமன்ற கலைஞர்களுடன் இணைந்து நடத்தவுள்ளனர்.

மிக நீண்டகாலத்தின்பின், நடைபெறும் இத்தமிழ் விழாவில் நாடகங்கள், கவியரங்கம், சொற்பொழிவுகள் போன்றவை இடம்பெறும் எனவும் யாழ்ப்பாணத்திலுள்ள கலை ஆர்வலர்களுக்கு இது மிகச்சிறந்த வாய்பபாக அமையுமென்றும் யாழ் திருமறைக் கலாமன்ற வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (உ-59)

## வாய்க்கால் திருத்தம்

யாழ்/ போதனா வைத்தியசாலைககு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கழிவு வாய்க்கால் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-104)

## வவுனியாவில் சத்துணவுத் தொழிற்சாலை அமையும்

(கொழும்பு)

திரிபோஷா போன்ற சத்துணவு ஒன்றைத் தயாரிக்கும் தொழிற்சாலை வவுனியாவில் அமைக்கப்படவுள்ளது.

கற்பிணித்தாய்மார்கள், குழந்தைகள், மாணவர்கள் போன்றவர்களுக்கு போஷாக்கு அளிக்கும் வகையில் இத்தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது.

இத்தொழிற்சாலை அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபா செலவாகுமென்றும் இதற்கான நிதியை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ்தேவானந்தா வழங்கவுள்ளார் எனவும் வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ-7)

## சமாதானத்தில் ஆர்வம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைபபுலிகளுக்கும்இடையே நீண்டகாலமாக நிலவி வந்த பகைமை உணர்வு நீங்கி, இரு தரப்பும சமாதான முன்னெடுபபுகளில் மிகத்தீவிரமாக ஈடுபடடுவருவதாக, இந்தியாவல இருந்து வெளியாகும் இந்துபபததிரிகை செய்தி வெளியிடடுளளது. [உ-4]

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது கண்டபாட்டில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெறும் இடங்களுக்கு அதிரடி விஜயம் செய்து அங்கிருப்போரைத் தாக்குவதுடன் பயன்படுத்தப்படும் பொருட்களைத் துவம்சம் செய்வதில் யாழ். நகரப்பகுதியில் இனம் தெரியாதஇளைஞர்குழுஒன்று ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

சில தினங்களின் முன் கஸ்தூரியார் வீதிப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்ற வீடொன்றில் புகுந்த இளைஞர் குழு இதேபாணியில் தாக்குதல் நடத்தியதில் பலர் காயமடைந்துள்ளனர்.

நல்ல காரியமானால் யார் செய்தாலும் சரி – பெயர் விலாசம் முக்கியமில்லையெனஇச்சம்பவங்கள்குறித்து பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## கடற்படைக்கு பங்களாதேஷ் பயிற்சி

(கொழுமபு)

இலங்கைக கடற்படை வீரர்களுக்குப் பயிற்சி வழங்க பங்களாதேஷ் அரசு முனவந்துள்ளது.

இலங்கைக் கடற்படைத் தளபதிவைஸ்.அட்மிரல்தயா சந்தகிரி பங்களா தேஷிற்கு அணமையில் மேற் கொணடிருந்த விஜயத்தை யடுத்தே பங்களாதேஷ் பிரதமர் ஷேக் அஜீனாபாகித இவ் உதவி பறறி அறிவித்துள்ளார். [க-4]

## இடம்பெயரும் அளவெட்டிப் பகுதியில் மிதிவெடி அபாயப் பலகைகள்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அபாயம் பற்றிய எச்சரிக்கைப் பலகையை விறகு வியாபாரிகள் சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வரும் சம்பவம் அளவெட்டிப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகிறது.

மிதிவெடி அபாயம் உண்டென இனங்காணப்பட்டு, அபாயம் குறித்த எச்சரிக்கைப் பலகை நாட்டப்பட்ட இடங்களில் விறகு வெட்டுவதற்கு வசதியாக அங்கிருக்கும் பலகைகளை அகற்றி தமக்கு இஷ்ரமான இடங்களில் விறகு வெட்டுபவர்கள் நாட்டி விடுகின்றனர்.

இவ்வாறு மிதிவெடிப் பலகைகள் இடம்பெயர்வதால் உண்மையில் மிதிவெடி அபாயம் காணப்படும இடங்களை அறியாமல் மக்கள் நடமாடுவதுடன்,

மிதிவெடி அபாயம் அற்ற பல பிரதேசங்கள வீணே அபாயமுள்ள இடங்களாக இனம் காட்டப்படுகின்றன.

இது விடயம் தொடர்பாக பொது நிறுவனங்கள கவனம் எடுததுச் செயற்படுவதன் மூலம மக்களின் உயிர் மற்றும் அவயவ இழப்புக்களை ஓரளவு தடுத்து நிறுத்த முடியும என இப்பகுதிப் பொதுமக்கள ஆதங்கம் வெளியிட்டுளளனர். (உ-7)

## கூச்சல் குழப்பங்கள் மத்தியில் தெல்லிப்பழை மகாஜனா ப. மாணவர்சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் கல்லூரி மண்டபத்தில்பெரும் கூச்சல்குழப்பங்கள் மத்தியில் நடந்தேறியது.

பாடசாலை நிர்வாகத்திற்கும்பழைய மாணவர்களுக்குமிடையே நிலவிய கருத்து முரண்பாடுகள் காரணமாக முன்பும் ஒருதடவை பொதுக் கூட்டம் கூட்டப்பட்டபோதிலும் தெரிவு எதனையும் மேற்கொள்ள முடியாத அளவில் கூச்சல்குழப்பங்கள் இருந்ததனால் அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் கல்லூரி அதிபர் சுந்தரலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தபோது பழையமாணவர் சங்கம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு பலமணிநேரம் கூச்சல் குழப்பம் எழுந்தது.

எனினும்: இக்கூட்டத்தில் சண்டிலிப்பாய்பிரதேசச்செயலர் வேதநாயகன் உதவித் திட்டப்பணிப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் மேற்கொண்ட பகீரத முயற்சியினால் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.(ந)

## குடும்பஸ்தரைக் காணவில்லை

(வவுனியா)

வவுனியா பரணிக் குளம் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற ஆறு பிளளைகளின் தந்தையார் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார்.

வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த ப.குணசேனா என்பவரே கடந்த வியாழக்கிழமை முதல் காணாமற் போயுள்ளார். (உ-5)

## கிழக்கு பல்கலையுடன் மட்டு. இசை நடனக் கல்லூரி இணைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கலலூரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு அபிவிருததி, புனர்வாழ்வு, புனரமைபபு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணைப்புப் பத்திரத்தை உயர்கல்வித்தகவல் தொழில்நுட்ப அமைச்சர் இந்திக குணவர்த்தன விடம் வைபவரீதியாக கையளித்தார். (உ)

## வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு உதவு பொருள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் செல்லத்துரைக்கு கலாசார அமைச்சினால் கலாபூசணம் விருது வழங்கப் பெற்றமையை கௌரவிக்கும்முகமாக கந்தர் மடம் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வு நேற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 2வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தின் தலைவர் க. சிவராமலிங்கம் தலைமையில் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள கலைமகள் ச.ச. நிலைய மண்டபத்தில் நடைபெற்ற போது இடம் பெற்றது.

மேலும் அக்கூட்டத்தில் ஜே/102 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 9 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள, பாடசாலைப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள் வழங்கப்பட்டதுடன்,

பெற்றோரை இழந்து தவிக்கும் 4 குழந்தைகளுக்காக கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பித்திருக்கும் கணக்கில் வைப்பிலிட இரண்டாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. (உ-2)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் சிலத்திரு அம்பலவாணநாவலர்நினைவு தினச் சொற்பொழிவை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

இன்று பி:ப 3:30 மணிக்கு சித்தன்கேணியில் இடம் பெறும் சொற்பொழிவைப் புலவர்மணி க. மயில்வாகனனார் ஆற்றுவார். (உ)

## கல்வி அபிவிருத்தி இளைஞர் கழகம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாவறகட்டு ஜே. 131 கிராம சேவகர் பிரிவில் கல்வி அபிவிருத்தி இளைஞர் கழகம் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டு நிர்வாக சபைத்தெரிவு இடம் பெற்றது.

தலைவராக பி. விஜயகுமார் செயலாளராக ரி. விஜயகுமார், பொருளாளராக எஸ். தயாளன், உப தலைவராக கே. மணிவதனி, உபசெயலாளராக எஸ்.சரிதா, அமைப்பாளராக கே. குணநாதன் ஆகியோருடன் பிரிவுத்தலைவர்கள் நான்குபேரும்தெரிவு செய்யப் பட்டனர். (உ-75)

## வலைப்பந்தாட்டம் ஐயனார் வி. க. வெற்றி

(ஊர்காவற்றுறை)

தீவக விளையாட்டுக்கழகங்களின் ஒன்றியம் தொழிற் சங்கங்களுடன் இணைந்து ஈழமக்கள ஜனநாயகக்கட்சியின் ஆதரவுடன் மேதினத்தை முன்னிட்டு விளையாட்டு மறறும கலாசாரப் போட்டிகளினை நடத்திவருகின்றது.

அணமையில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி முதலாவது இடத்தினையும், மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி இரண்டாவது இடத்தினையும் ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மூன்றாவது இடத்தினையும பெற்றன

படகோட்டப் போட்டியில் வேலணை அமபிகைநகர் உதய சூரியன் விளையாட்டு கழக அணி முதலாமிடத்தினையும, மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுககழக அணி இரண்டாவது இடத்தினையும். வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுககழக அணி மூன்றாவதுஇடத்தினையும பெறறுள்ளன.

தொடர்ந்து மேதினம் வரை விளையாட்டுப்போட்டிகள இடமபெற்றுவருமென தெரிவிககப்படுகிறது. (உ-75)

# இருதரப்பும் விரும்பிக்கேட்டால்

# மத்தியஸ்தம் வகிக்க கனடா தயார்

## கனடா வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(ரொறன்ரோ)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் இருதரப்பு அனுசரணையாளராக மத்தியஸ்தம் வகிக்க, கனேடிய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மத்தியஸ்தராக செயற்படுமாறு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் தம்மைக்கோரினால் அவ்வாறு செயற்படத் தயாரென கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் மான்லி அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் சமாதானத்திற்கான கனடாவின் நிவாரண அமைப்பின் (சி.ஆர்.பி எஸ்.) செயலாளர் கிறீஸ்தோபர் சந்திரசேகர கனடாவின் வெளிவிவகார அமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலளிக்கும் முகமாகவே இவ்வறிக்கையை ஜோன் மான்லி வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு நோர்வேத்தூதுவர் ஆற்றிவரும் பணியை கனடா ஆதரிக்கின்றது. அதேவேளை இலங்கை நிலவரத்தை கனடா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், சமாதான முயற்சிக்கு நடுவராகச் செயற்பட கனடா விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-05)

### அடிமைத் தொழில் புரிய

# அடைத்து வைக்கப்பட்டிருந்த 84 சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர்

ஆந்திரப் பிரதேச ஹைதிராபாத் பகுதியில் நடாத்திய சோதனையில் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருந்த எண்பத்தி நான்கு சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள் நல வாழ்வுப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போதுமேற்படி தொகையினர் மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் உள்நாட்டில் அடிமைத் தொழில் செய்விக்கவுமே இவர்கள தடுத்து வைக்கப்பட்டிருந்ததாய் அறியமுடிகிறது.

இதேவேளை விடுவிக்கப்பட்ட இச்சிறுவர்களில், உடல் ஒட்டிய நிலையில் நோய் கண்டவர்களாக முப்பத்து நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் தடுப்புக்கு உடந்தையானவர்களும் போலி தத்துக்காரர்களும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள். (து)

# இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுக்களில் இறங்க வேண்டும்

## சீனா வேண்டுகோள்

(புதுடில்லி)

இந்தியாவும் பாகிஸ்தானும் சமரசப்பேச்சுவார்த்தையில் இறங்கி இரு நாட்டுக்கு மிடையேயான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்தியாவுக்கான சீனத் தூதுவர் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் சீனத் தூதுவர் மேலும் பேசுகையில் லாகூர் உடன்படிக்கையின் படி பேச்சுவார்த்தைகளைத் தொடரலாமென்றும் யுத்தத்தால் சாதிக்க முடியாததைப் பேச்சுவார்த்தையால் சாதிக்கலாமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நிலவரம் மிகச் சிக்கலாக இருப்பதுடன் இந்தியாவும் சீனாவும் சர்வதேச நோக்குகளில் ஒரே கருத்துக்களைக் கொண்டிருப்பதால் அண்டை நாடான பாகிஸ்தானுடன் பிரச்சினைகளை வளர்க்காது உடனடியாகப் பேச்சுவார்த்தைகளில் இறங்க வேண்டுமென்றும் தெரிவித்தார். (து)

# ஆளும் உரிமையை அளியுங்கள் மக்களிடம் வை. கோ. யாசகம்

(சென்னை)

தமிழகத்தை ஆளும் வாய்ப்பை ம தி மு க விற்கு தாருங்கள் என்றும தமிழக மக்களிடையே ம.தி.மு.க செயலர் வை. கோபாலசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் பிரசாரக் கூட்டம்ஒன்றில் பேசிய போதே வை.கோ மேற்கண்ட கோரிக்கையை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தற்போது தமிழகத்தில் உள்ள இரு பெரும் கூட்டணிகளாலும் தமிழக மக்களுக்கு சிறந்த ஆட்சியை வழங்கமுடியாது.

இரண்டுமே ஒன்றை விட ஒன்றுமிஞ்சியவிதத்தில் ஊழல் இராச்சியம் புரிந்து வருகின்றன.

தமிழக மக்களின் பணத்தினைச் சுரண்டி தாம் சுகபோக வாழ்வை அனுபவித்து வருகின்றன. எனவேவரப்போகும் சட்ட சபைத் தேர்தலில் தமிழக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தமிழகத்தை ஆளும் வாய்ப்பை ம தி.மு.க வுக்கு வழங்கி தமிழகத்தில் சிறந்த ஆட்சிஏற்படக்கூடியவகையில் உங்களின் வாக்களிப்பு அமைய வேண்டுமென வை.கோ. மேலும் பொது மக்களிடத்தில்வேண்டுகோள் விடுத்தார். [உ-9]

# தி. மு. க. சாதிக் கூட்டணியல்ல கலைஞர் மு. கருணாநிதி விளக்கம்

[சென்னை]

தி. மு க சாதிக்கட்சிகளின் கூட்டணியல்ல அது 'சாதிக்கும் கூட்டணி' என்று முதல்வர் மு.கருணாநிதி தனது தேர்தல் பிரசாரத்தின் போது காட்டமாக தெரிவித்துள்ளார்.

அ இ அ.தி.மு.க கூட்டணியினர் தி மு. க சாதிக்கட்சிகளின் கூட்டணியென விமர்சனம்செய்தமையை மறுக்கும் விதமாக கருணாநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சில சாதிக் கட்சிகளுக்கும், சமயக் கட்சிகளுக்கும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள களங்க நிலையைப் போக்கவும் அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவுமே அக் கட்சிகளை தி.மு.க கூட்டணி அரவணைத்துள்ளது.

தி.மு.கவின் வழி என்றுமே தனிவழி அண்ணா வழியில் அயராது உழைப்போம் ஆதிக்க மற்ற சமூகத்தை அமைத்தே தீருவோம் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். வன்முறையைத் தவிர்த்து வறுமையை வெல்வோம் என்று 'படையப்பா' பாணியில் தன் கொள்கைகளைக் கலைஞர் கோடிட்டுக் காட்டியுள்ளார். (உ-9)

# தற்கொலைத் தாக்குதலுக்கு ஜனரஞ்சக இராணுவ முன்னணி உரிமை கோரியது

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு ''ஜனரஞ்சக இராணுவமுன்னணி'' என்ற பலஸ்தீன இயக்கம் உரிமை கோரியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை, இஸ்ரேலில் இடம்பெற்ற இத்தற்கொலைக்குண்டுத்தாக்குதல் 1988.ஏப்ரல் 16 ஆம் திகதி ரியூனிஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் அபூஜிகாத்தின் 13 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடத்தப்பட்டதாக ஜனரஞ்சக இராணுவ முன்னணி தெரிவித்துள்ளது.

மேற்படி தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் தற்கொலையாளி உட்பட வேறு இருவர் பலியானதுடன் 41 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ரஜினியின் ஆதரவு யாருக்கு விரைவில் தெரியவரும்?

(சென்னை)

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் நடிகர் ரஜினிகாந்த் தனது ஆதரவை யாருக்கு வழங்கவுள்ளார் என்று இன்னும் ஓரிரு நாட்களுள் தெரிவிக்கவுள்ளதாக அகில இந்திய ரஜனி ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணன் அறிவித்துள்ளார்.

பெங்களூர் சென்றுள்ள ரஜினிகாந்த் இன்னும் ஓரிரு நாட்களுள் சென்னை திரும்புவார் என்றும் அதன் பின் அவரது ஆதரவு எக்கூட்டணிக்கென்று தெரிவிப்பார் என்றும் சத்தியநாராயணன் மேலும் கூறியுள்ளார்.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் முடிவுகளில் ரஜனிக்காந்தின் ஆதரவும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# காங்கிரஸ் கட்சியால் இந்திய அரசுக்கு பெருத்த பணச்செலவு

[புதுடில்லி]

பாராளுமன்றக் கூட்டங்களை காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் குழப்பி வருவதால் பணமும், நேரமும் வீணாகச் செலவழிகின்றன என்று பாரதிய ஜனதாக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சியினர், டெஹல்கா விவகாரத்தைச் சாட்டாக வைத்து தினமும் கூச்சல் குழப்பங்களில் ஈடுபட்டு வருவதால் பாராளுமன்றத்தில் எந்த அலுவல்களும் நடக்காமல் பல்வேறு மசோதாக்கள் விவாதங்களுக்குட் படுத்தப்படாமல் இருக்கின்றன.

இதனால் அரசாங்கத்திற்கு நேரமும், பணமும் வீணாகச் செலவழிகின்றன என்று பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன், மறுதிகதி குறிப்பிடாமல் பாராளுமன்றத்தினை ஒத்திவைக்குமாறும் பாரதிய ஜனதாக் கட்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# தீவிரவாதக் கும்பலால் 30 பேர் தடுத்து வைப்பு

(இஸ்தான்புல்)

துருக்கியில் பிரபல உணவக விடுதிக்குள் புகுந்த சிலர் அங்கிருந்த 30 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

செச்சினியா மீது ரஷ்யா மேற் கொண்டு வரும் இராணுவ கெடுபிடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தீவிரவாதக் கும்பல் ஒன்று இச் செயலைப் புரிந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, செச்சினிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் கடந்த மாதம் துருக்கியிலிருந்து மொஸ்கோ சென்ற விமானத்தை கடத்தியதும் இத்தீவிரவாதக் கும்பல் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் சண்முகம் பெயர் இருட்டடிப்பு

(புதுவை)

காங்கிரஸ் வெளியிட்டுள்ள வேட்பாளர் பட்டியலில் புதுவை முதல்வர் சண்முகத்தின் பெயர் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுடில்லியில் புதுவைச் சட்டப்பேரவையில் 20 தொகுதிகளில் போட்டியிடும் காங்கிரஸின் பட்டியலை காங்கிரஸ் பொதுச் செயலர் குலாம் நபிஆஷாத் வெளியிட்டு வைத்தார்.

இப்பட்டியலில் சண்முகத்தின் பெயர் இடம்பெற, காங்கிரஸ் மேலிடம் அனுமதி வழங்கவில்லையென அவர் தெரிவித்துள்ளார். [உ-9]

# தி. மு. க. தொண்டர் ஆர்ப்பாட்டம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. வி. அங்கம் வகிப்பவருமான செல்வராஜாவுக்கு முசிறித்தொகுதியை ஒதுக்க வேண்டுமெனக் கோரி தி.மு. கத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தேர்தல்பிரசாரங்களுக்காக திருச்சி சென்ற மு. கருணாநிதி அங்கு விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் அவ் விடுதியின் வாயில் பகுதியில்கூடிய தி.மு.க தொண்டர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

தற்போது முசிறித் தொகுதிக்கு விவேகானந்தன் என்பவரைவேட்பாளராக தி.மு.க நிறுத்தி யுள்ளமைகுறிப்பிடத்தக்கது. [உ-9]

பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்

குறள்

# வலம்புரி

## பிரிட்டனுக்கு விழுந்த அடி

வன்னிப் பகுதியில் 'மானிடத்தின் அவலத்தைக் கண்டேன்' என்று லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வின் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைவரம் பற்றி நேரில் அறிந்து கொண்ட ஓர் சர்வதேசப் பத்திரிகையாளர் மேரி கத்தரின். வன்னி வாழ் மக்களின் அவல நிலையை நேரில் காண வந்த அவருக்கு வவுனியாவில் வைத்து வழங்கப்பட்ட பரிசு துப்பாக்கிச் சூடு. அதனால் அவரின் கண் பார்வைக்கே ஆபத்தாகி விட்டது. தமிழ் மக்களின் அவலங்களை நேரில் கண்டு வெளியில் சொல்ல முனைபவர்களுக்கு அவர்களின் கண் பார்வையை எடுத்து விடுவது தான் எமது பதிலடி என்பது போல் மேரி கத்தரின் மீதான துப்பாக்கிச் சூடு அமைந்துள்ளது.

இது ஒருபுற ஆய்வாக இருக்க மறுபுறத்தில் அவர் எழுதிய கட்டுரை தரும் திடுக்கிடும் தகவல்கள் மூலம் தமிழ் மக்கள் வன்னியில் படும் துன்பம் எத்தகையது என்பதை உணரமுடிகிறது.

வடபுலத்தில் இருக்கும் நாம் அதன் ஒரு புறத்தில் நம்மவர்கள் படும் துன்ப துயரங்களைக் கூட அறிய முடியாத நிலையில், ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோமென்றால் இந் நாட்டில் தமிழர்க்கு இருக்கும் உரிமையின் அளவை உணர முடியும்.

எனினும் லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் மேரி கத்தரின் வன்னி சென்று அங்குள்ள மக்கள் படும் துன்பங்களை, அத் துன்பங்கள் மத்தியிலும் விடுதலைப் புலிகள் மீது அவர்கள் காட்டும் பரிவை விலாவாரியாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதில் விடுதலைப் புலிகள் மீது தமிழ் மக்கள் அளவு கடந்த நம்பிக்கையும், அன்பும் வைத்திருக்கிறார்கள் என்று லண்டன் சண்டே ரைம்ஸின் செய்தியாளரால் தெரிவிக்கப்பட்ட கருத்து விடுதலைப் புலிகளை பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடை செய்த பிரிட்டன் அரசுக்கு விழுந்த பலத்த அடியெனலாம்.

# சிறுவர்களுக்கு உண்டாகும் சில நோய்களைக் குறுகிய காலத்தில் குணமாக்கும் கை மருந்துகள்

குழந்தைகளுக்கு வலி கண்டால் உடனே ஒரு அவுன்சு தண்ணீரில் ஒரு மேசைக் கரண்டி கறியுப்பைப் போட்டுக் கரைத்து வயதிற்கு ஏற்ப ஒன்று முதல் நான்கு தேக் கரண்டி வரை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும் பின்னர் சிறிது உப்பை அரைத்து குழந்தையின் தொப்புள் மீது பூசி விடலாம். பதினைந்து நிமிடம் சென்ற பின் உப்பை அகற்றி விடலாம்.

இம்முறையானது உடன் சாந்தியை மட்டும் கொடுக்கும். கூடிய விரைவில் தகுந்த வைத்தியரை அணுகிக் குழந்தைக்குச் சிகிச்சை செய்ய வேண்டும்.

## மருத்துவ விளக்கம்

### உண்ணாக்கு வளர்ச்சிக்கு

மிளகும், உப்பும் அரைத்து வெருகு மடல் அல்லது பிரண்டைத்தண்டில் தொட்டு உள்நாக்கில் இரண்டு நிமிடம் பிடிக்க வேண்டும். இப்படி மூன்று நாள் செய்துவரின் சுகம் காணலாம். பாவனையிலுள்ள அம்மியின் கரையிலுள்ள காய்ந்த சரக்குகளை பொருக்காக எடுத்துத் தூளாக்கி வெருகு மடலால் தொட்டு மேற் கூறியபடி பிடிக்கவும் சுகம் காணலாம்.

குப்பை மேனியிலை 10 மிளகு 5 சேர்த்து அரைத்து மூன்று நாட்கள் காலையில் தலை உச்சியில் உரோஞ்சி அதில் உள்ள ஒரு மயிரை இழுத்து விட்டால் குணமுண்டாகும்.

### தானப் பூச்சி

இது வட்டப்புழு, நாடாப் புழு போல் எங்கள் உணவில் பங்குகொள்ளாது. மாறாக மனிதரின் கழிவறையில் குதத்தின் உட்புறத்திலே மலத்தை உண்டு வாழ்கின்றன. எங்களுக்கு இப்பூச்சியினால் தீங்கில்லையானாலும் மலவாசலை சுற்றி உள்ளேயும் புறத்தேயும் அரித்துக்கொண்டிருக்கும். முக்கியமாக இப்பூச்சி இரவில் தான் மேலே வந்து கூடுதலாக அரிப்பைத் தரும். பகலில் மிகவும் அரிதாகவே அரிப்பு இருக்கும்.

### சிகிச்சை

எனிமா வைப்பதன் மூலம் இப்பூச்சிகளை வெளியேற்றலாம். மாதுளம் பழத்தை அடிக்கடி உண்பதால் இப்பூச்சிகளை இல்லாமல் செய்யலாம். மீண்டும், மீண்டும் வராமல் அதன் மூலம் தடுக்கலாம். பாவற்காயில் செய்யப்பட்ட உணவுகளைக் கூடுதலாக உண்பதினாலும் இப்பூச்சிகளை இல்லாதொழிக்கலாம்.

## டாக்டர் ஏ. எஸ். மகாலிங்கம்

(வவுனியா)

### சிறுபிள்ளை மந்தம்

ஈச்சமிலையைத் துவைத்து ஒருதேக்கரண்டிசாறு எடுத்து சிறிது உப்பும் சேர்த்துக் கொடுக்க மந்தவாய்வு நீங்கும்!

குழந்தையின் உடலில் செங்கரப்பன், கருங்கரப்பன் போன்ற கிரந்தி வியாதிகள் உண்டெனக் கண்டால், கோழி முட்டையின் வெள்ளைக் கருவை மாத்திரம் எடுத்துக் குழந்தையின் தலையிலிருந்து பாதம் வரை உடல் அடங்கலும் தேய்த்து வாழை இலையில் அரை மணி நேரம் படுக்க வைத்துப் பின் குளிக்க வார்க்கவேண்டும். இப்படிப் பதினைந்து குளிப்புகள் முடிந்ததும் கிரந்தி எண்ணெய் பூசிக் குளிப்பாட்டினால் சகல கரப்பன் வியாதிகளும் தீரும்.

குழந்தைகளுக்கு சிறுநீர் கழியாது விடில், வெள்ளரி விதைகளைத் தண்ணீர் விட்டரைத்துத் தொப்பூழில் பூசச் சிறுநீர் கழியும்.

### குழந்தையின் உடற்பு பெருப்பதற்கு

ஆலம்விழுது தென்னம்பூ. அதிமதுரம் மிளகு. நற்சீரகம் வகை 15 கிராம் எடுத்து பசுவின் பாலில் அரைத்து. இதனுடன் சுத்தமான பசு நெய் ¼ போத்தல் கலந்து கலக்கி காய்ச்சிப் பதத்தில் வடித்துப் பத்திரப்படுத்தி காலை மாலை ஒரு தேக்கரண்டி வீதம் கொடுத்து வர பலவீனமான பிள்ளைகள் உடல் பெருத்துப் புஷ்டியாக வருவார்கள்.

### ஓங்காளம் விக்கல் நிற்பதற்கு

பாதி எலுமிச்சம் பழத்தை சிறுதுண்டுகளாக வெட்டி அதேயளவு இஞ்சியையும் சிறுதுண்டுகளாக்கி இரண்டையும் சட்டியிலிட்டு வறுத்து அடுப்பை விட்டிறக்கிப் போதுமான அளவு தேனும் விட்டு கிளறிப் பிழிந்து வடிகட்டி எடுத்து நாக்கில் இடைக்கிடை தடவ ஓங்காளம் நிற்கும்.

மாதுளம்வேர், நெற்பொரி, சர்க்கரை, திற்பிலி வகைக்கு ஐந்து கிராம் படி எடுத்துத் தூளாக்கித் தேனில் குழைத்து உட்கொள்ள விக்கல் நிற்கும்.

# சமூகஒழுங்குணர்வுகுணாதிசயங்கள் போரினால் தரங்குன்றி விட்டன

## டாக்டர் என். சிவராஜா தெரிவிப்பு

(தென்மராட்சி)

வடகிழக்கு மாகாணத்தில் கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் யுத்தத்தின் காரணமாக இங்குவாழ்கின்ற மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களையும், துயரங்களையும், இழப்புக்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இக்கொடிய யுத்தமானது அனைத்துத் துறைகளையும் பாதித்துள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் பத்தாவது ஆண்டுக்கான தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வைத்திய கலாநிதி என். சிவராஜா கைலாசபதி கலையரங்கில் தலைவர் உரையின் போது குறிப்பிட்டார்.

சங்கத்தின் ஒன்பதாவது தலைவரான பேராசிரியர். கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தின் சுகாதார நிலையும்-எதிர்கால பிரதிபலிப்பும் எனும் பொருளில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

யுத்த முரண்பாடுகள் இடம்பெற்று வரும் இடங்களின் நிலவரங்கள் ஏனைய பகுதிகளை பல்வேறுபட்டவையாகவுள்ளன. உள்நாட்டு இடம்பெயர்வு. சமூக பொருளாதார அமைப்புகளின் சீர்குலைவுகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுகள் போதியளவு இல்லாமை, கட்டுப்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் அதிகரித்துவரும் விதவைகள். அனாதைகள் போன்ற காரணிகள் சமுதாயச் சீர்குலைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

வடகிழக்கில் சுகாதாரக் கட்டமைப்புகள் சீர்குலைந்து போயுள்ளன. யுத்த நடவடிக்கைகள் காரணமாக பெரும்பாலான அரசவைத்திய சாலைகள் அழிந்து போய் விட்டன. இன்னும் சில செயல்படமுடியாத காரணத்தினால் பூட்டப்பட்டிருக்கின்றன.

போரினால் உட்கட்டுமானங்கள் அழிந்து போய்விட்டன. சமூக ஒழுங்குணர்வு குணாதிசயங்கள் தரங்குன்றி விட்டன. ஒழுக்கம் மிகவும் தாழ்ந்த நிலைக்குப் போய் விட்டது.

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து காணப்படுகிறது கல்வி, சுகாதார நிலைகள் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

இத்தகைய நிலையை மாற்றி மீண்டும் ஒரு சரியான வழிமுறைக்கு கொண்டுவரக் கூடிய வல்லமை நன்மைகளை உருவாக்கும் சர்வாதிகாரியினாலேயே முடியக்கூடும் என சமுதாயத்தில் பலர் சிந்திக்கப் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார். (உ-77)

## மேதின ஏற்பாடுகளில் புதிய ஜனநாயகக் கட்சி

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும மேதினத்தை, புதிய ஜனநாயக கடசி நவ லங்கா தொழிற் சங்கத்துடன் இணைந்து யாழ். நகரில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வு என்பனவற்றை வலியுறுத்தி இம் மேதினத்தை நடாத்துவது எனப் புதிய ஜனநாயகக் கடசி தீர்மானித்துள்ளது.

மேற்படி கட்சியின் வட பிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இம் மேதினக் கூட்டத்தில புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் மற்றும் தொழிற் சங்க விவசாயப் பிரதிநிதிகள் கலந்து கொளளவுளளனர் (உ)

**அம்பலவாணநாவலர் நினைவு தினம்**

## சேவையை உரைக்கலாமோ

பேரிலங்கு அம்பல வாண நாவலர்
பிறங்குநற் கலைக்காவிற் படிந்து றைந்தே
சீரிலங்கும் சைவத்தொண்டே திருத்தொண்டாக
செய்தநற் பணிகளெலாம் செப்ப லாமோ!

காரிலங்கும் மழையெனக் கவினைச் சுரந்த
கனிந்தநல் அமுதான உரைகள் பேசும்
ஊரிலங்கும் படிவாழ்ந்த ஐயன் வாழ்வும்
உந்நாதமாம்சேவைகளை உரைக்க லாகும்.

வட்டூர்க் கடம்பன்

# இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தற்கொலை அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் 45 சதவீதத்தினர் போதியசுகாதார வசதிகள் இல்லாத நிலையில் உள்ளனர் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அதேவேளை, மட்டக்களப்பில் 82.7 வீதமானோர் இதேபோன்ற நிலையில் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்கொலை செய்பவர்களின் தொகையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்வர்கள் மத்தியிலேயே தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன்,

புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அண்மைக்காலத்தில் கூடி வருகின்றது ஒரு இலட்சம் சனத்தொகைக்கு 50.5 வீதம் என்ற வகையில் உயர்ந்துள்ளதாகவும் ஆய்வறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது. (உ-77)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1770)

# மேரிகத்தரின்மீதான கொலை முயற்சி

## பொது அமைப்புகள் கண்டிக்க வேண்டும்

(பரிஸ்)

அமெரிக்க பெண்மணியும் பிரித்தானிய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளருமான மேரி கத்தரின் கொல்வின் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை மனித உரிமை மற்றும் மனிதாபிமான அமைப்புக்கள் அனைத்தும் ஒருமித்த குரலில் கண்டிக்க வேண்டுமென பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் 'தமிழர் மனித உரிமைகள் மையம்' பகிரங்க வேண்டுகோளொன்றை அறிக்கை மூலம் விடுத்துள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மேரி கத்தரின் கொல்வின் மீது கொலை முயற்சி என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பத்திரிகையாளரின் உரிமையையும், சுதந்திரத்தையும் பேணுவதற்கு சர்வதேச ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேணடும். இந்தவகையில் மேரி கொல்வின் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியைக் கண்டித்து சகல மனித உரிமை மற்றும் மனிதாபிமான அமைப்புக்கள் தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழு ஆணையாளர் மேரி றொபின்சன் மற்றும்இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோருக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ)

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1769)

# நிமலராஜன் படுகொலை

## பூரண விசாரணை நடத்துக சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பான அறிக்கைவிளக்கத்தைத் தருமாறு பொலிசாரை சட்டமா அதிபர் கமலசபேசன் கோரியுள்ளார்.

பொலிசாரினால், நிமலராஜன் படுகொலை தொடர்பான அறிக்கை சட்டமா அதிரிடம் கையளிக்கப்பட்டது. அவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்தொடர்பாகவிளக்கமளிக்குமாறும், அது தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொண்டு விரைவில் பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் கமலசபேசன் பொலிசாரைக் கோரியுள்ளார்.

இதே வேளை செய்தியாளர்கள், பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் பிரான்சை தலைமையகமாக கொண்டு செயற்படும் 'ஆர் எஸ், எவ்' எனும் செய்திநிறுவனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக எதுவித விசாரணைகளும் நடத்தப்படாமைக்கு கண்டனம் தெரிவித்து கடந்த 19 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (இ)

### செகுடியரசு

பாதுகாப்பாக கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்கியுளது.

இரண்டரைமில்லியன்ரூபா பெறுமதியான எட்டு 20மி.மீ ரகபல்குழல் ரொக்கட் லோஞ்சர்கள் 25ரி, 55ரகயுத்த டாங்கிகள், ஆறுடாங்கிமீட்பு வாகனங்கள், ஆறுடாங்கி இடம்பெயர்வு வாகனங்கள் மற்றும் மூன்று நடமாடும் வைத்தளங்கள் என்பவற்றுடனும் வேறு போர்த்தளபாடங்களையும் எற்றிவந்த ஆயுதக்கப்பலில் இருந்து கடற்படையினரினதும், விமானப்படையினரினதும் பலத்த பாதுகாப்புடன் கொழும்பு துறைமுகத்தில் இவைகள் இறக்கப்பட்டுயுத்தமுனைக்கு நகர்த்தப்பட்டுள்ளது. (ம)

### சமாதான ..

கலந்து கொண்டனர்இச் சந்திப்பு கெடக்நிறுவனத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பை அடுத்து ஆணைக்குழு இன்று மன்னார் மடுத்திருப்பதிக்கு செல்லவுள்ளனர். அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளனர். (வ)

### யுத்தப்பிரதேச - - -

அல்லது, உயிராபத்துக் குட்பட்டாலோ எமக்கும் அதற்கும் எவ்விதமான பொறுப்பும் இல்லை யென்றும் தெரிவித்தார்.

இதேவேளை பிரித்தானிய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையாளர் மேரிகொல்வின் வவுனியாவில் தாக்குதலுக்குஉள்ளானமை குறித்து, பத்திரிகையாளர் சுதந்திரம் பேணப்படவேண்டுமென்று இலங்கையரசிடம் வெளிநாடுகள விடுத்த கோரிக்கைகளும் அழுத்தங்களும் பத்திரிகையாளர்மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டமைக்கான காரணமென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-05)

### நோர்வே - - :

தூதுவர் புலிகளின் நோக்கம் தொடர்பாகஜனாதிபதியுடன் பேசுவார் என்றும் அதனை அடுத்துஇருசாராரிடமும்பேச்சுக்குஉதவியாகயுத்தநிறுத்தம் மேற்கொள்ளுமாறு கோருவார்எனவும் தூதரகவட்டாரங்களே மேலும் தெரிவித்தன. (வ)

# ஆயுதபாணிகள் இருவரைக் கடத்தினர்

(கொழும்பு)

வெலிக்கந்தைப் பகுதியில் இரு குடியேற்ற வாசிகள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-4)

# ஐ. தே. கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

ஐக்கிய தேசியக் கட்சி ஆளும் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர உள்ளது.

கட்சியின் நாடாளுமன்றத்துக்கும் இதற்கான அங்கீகாரத்தை அடுத்த கூட்டத்தில் பெற்றுக்கொள்ளுமென தாம் எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் டாக்டர் கருணா சேன கொடித்துவக்குதெரிவித்துள்ளார். (ந-4)

# தொல்லை தவிர்ப்புக்குழு பொலிஸாரிடம் கோரிக்கை

(கொழும்பு)

மன்னார் ஊடகவியலாளர் பஸ்மியன்விசாரணைதொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லை தவிர்ப்புக்குழு பொலிசாரைக்கோரியுள்ளது.

இதேவேளை புங்குடு தீவு சாரதாம்பாள் கொலை தொடர்பாகவும் விசாரணை நடாத்தப்பட்டபோதும் சாட்சிகள் எவரும் கிடைக்காமையால்குற்றவாளிகளைக் கைது செய்யமுடியாதிருப்பதாகசிஐடி, பொலிசார் தொல்லை தவிர்புக்குழுவிடம் தெரிவித்துள்ளார் இதனை யடுத்து சாரதாம்பாள் கொலை தொடர்பான விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும்வேறு சாட்சிகள் இருந்தால் அவர்களை விசாரிக்கும்படியும்தொல்லை தவிர்ப்புக்குழு கேட்டுள்ளது இக்குழு நீதியமைச்சர்பட்டி வீரக்கோன் தலைமையில் கூடியது. (வ)

# இந்தியாவில் செயற்கைக் கோளைச் செயற்படுத்தும் பணி

(புதுடில்லி)

கடந்த வெள்ளியன்று இந்தியா அனுப்பிய ஜி. எஸ். எல்.டி – 1 என்ற றொக்கெட் வெற்றி கரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து செயற்கைக் கோளை விண்ணில் நிலைநிறுத்தும் பணியும் வெற்றிகரமாக தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று பூமியில் இருந்து விண்ணுக்கு 11 ஆயிரத்து 990 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை நிறுத்தப்பட்ட மேற்படி செயற்கைக் கோள் தற்போது இயல்பான நிலையில் பூமியைச் சுற்றி வலம் வருகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### உயிரிழந்த . . .

துடன் பெருமளவான மக்கள் போரில்உயிரிழந்த போராளிகளுக்குஅஞ்சலிசெலுத்த ஆனையிறவு படைத்தளத்தில் ஒன்றுகூடியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-05)

### யுத்த - - -

பட்சமான போர்நிறுத்தம் செய்து மாதாந்த அடிப்படையில் கடந்த நான்கு மாத காலமாக அமைதி காத்து வந்தோம்.

நாம் போருக்கு ஒய்வு கொடுத்தது மட்டுமன்றி நோர்வேயின் புரிந்துணர்வு உடன்பாடு யோசனைக்கு இசைவாகக் கொழும்பிலும் தென்மாகாணங்களிலும் வன்முறைத் தாக்குதல்களை நிறுத்தியிருந்தோம், எமது போர் நிறுத்தம் சிங்கள தேசத்தில் அமைதியையும் ஸ்திரநிலையையும் ஏற்படுத்தியதோடு சமாதானப் பேச்சுக்கான நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் தோற்றுவித்தது. ஆனால் அதேகாலகட்டத்தில் தமிழர் தாயகத்தில் போரும், வன்முறைகளும், சாவும், அழிவுகளுமே தாண்டவமாடியது.

'சிறிலங்கா அரசாங்கத்தின் கடும்போக்கான, விட்டுக் கொடாத நிலைப்பாடு காரணமாகவே நாம் இப்படியானவேதனைக்குரியமுடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம். சிங்கள அரசானது எமது சமாதான நல்லெண்ண முயற்சியை நிராகரித்து வந்ததுடன் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலிருந்தும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி எமது தரப்பில் பெருமளவிலான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வந்தது. எதிர்த் தாக்குதல்களைத் தவிர்த்து, வெறும் தற்காப்புப் போர் உத்திகளை கடைப்பிடித்து வந்ததால் எதிரியின் இராணுவத் தாக்குதல்களை தகுந்தமுறையில் எதிர்கொள்ள முடியாத காரியமாக இருந்தது. இப்படியான ஆபத்தான புறநிலையில் நாம் தொடர்ந்தும் தன்னிச்சையாக அமைதியைப் பேணுவது இயலாத காரியம். ஏனென்றால் எமது நல்லெண்ண சமாதான முயற்சியை எதிரியானவன் தனது இராணுவ அனுகூலத்திற்காக பயன்படுத்தி வருகிறான். இதனை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது'

'எமது ஒருதலைப் பட்சமான போர்நிறுத்தத்தை கௌரவித்து சிறிலங்கா அரசாங்கத்தையும் யுத்தநிறுத்தம் செய்யுப்படி இராஜதந்திர அழுத்தப் கொடுக்குமாறு நாம் சர்வதேச சமூகத்தை குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா ஆகியவற்றை தொடர்ச்சியாக வேண்டி வந்தோம். ஆயினும் எமது வேண்டுகோள் பலனளிக்கவில்லை. எமது சமாதான நல்லெண்ண முயற்சியை வரவேற்று ஊக்கமளிக்க வேண்டிய உலக நாடுகள் சில, எமது இயக்கம் மீது தடையையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளதுடன் எமது இயக்கத்துக்கு எதிரியான சிறீலங்கா அரசுக்கு நிதியுதவி ஆயுத உதவி இராணுவப் பயிற்சி ஆகியவற்றை வழங்கி வருகின்றன. சர்வதேச சமூகத்தின் இந்நிலைப்பாடானது சிறீலங்கா அரசின் கடும் போக்கானஇராணுவ அணுகுமுறைக்கு ஊக்கமளிப்பதாகவே அமைகிறது.'

'நாம் கடந்த நான்கு மாதங்களாக சுயமானமுறையில் போர்நிறுத்தம் செய்து வந்ததால் இராணுவ ரீதியில் பல பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. நாம் அமைதி பேணியது காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை இழக்கவேண்டி ஏற்பட்டது. பெருமளவில் உயிர்ச் சேதங்களையும் சந்திக்க வேண்டி இருந்தது. கடந்த நான்கு மாத காலத்தில் 160 விடுதலைப் போராளிகள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள். 400 பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள். கிழக்கு மாகாணக் கரையோரமாக குறிப்பாக முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவக் கிராமங்களிலுள்ள மக்கள் குடியிருப்புகள்மீது சிறீலங்காவின் போர் விமானங்கள் தொடர்ச்சியாக கண்மூடித்தனமாக குண்டுத்தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தக் கொடுமை காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வந்ததுடன் பொதுமக்களின் உடமைகளுக்கும் பெரும்சேதம் ஏற்பட்டிருக்கிறது. எமது விடுதலை இயக்கம் மிகவும் கட்டுப்பாட்டுடன் சீரிய முறையில் அமைதியைப் பேணி வந்த அதே சமயம் சிங்கள ஆயுதப்படைகள் ஓய்வில்லாமல் தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் எமது போராளிகள் மத்தியில் விரக்தியும் மனத்தளர்வும் ஏற்படும் சூழ்நிலை எழுந்தது. இது ஒருபுறமிருக்க நாம் அமைதிபேணிய காலத்தில் சிறீலங்கா அரசு நாசகார அழிவாயுதங்களை பெருமளவில் இறக்குமதி செய்து குவித்திருக்கிறது. போர்க்கப்பல்கள் குண்டு வீச்சு விமானங்களை பெருமளவில் கொள்வனவு செய்து கடற்படையையும் வான் படையையும் விஸ்தரித்துள்ளது. நாம் அமைதிபேணிய காலத்தில் சிறீலங்கா அரசு தனது முப்படைகளையும் பலப்படுத்தி நவீனமயப்படுத்தியதுடன் ஒருபெரும்போருக்கு தன்னைத் தயார்படுத்தி வந்திருக்கிறது' எனப்புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (வ)

## நேர்முகப் பரீட்சை இன்று நடக்கும்

தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுகளில் இன்று காலை 10 மணிக்கு அபிவிருத்தித் தொண்டர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும். (ந)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது